DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 392/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வெங்கடேசன் |
| Father / Husband Name | பலராமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **24.03.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சாலவேட்டில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது நண்பர் ஆவார். கடந்த 31.07.2016 ம் தேதி ஆஜர் எதிரி எனக்கு போன் செய்து அவர் அவரது மாமியார் தங்கம் என்பவரை சாலவேடில் இருந்து மேல்மருவத்தூர் பேருந்து நிலையத்திற்கு அவரை அழைத்துக் கொண்டு அவரது இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது ராமாபுரம் தாண்டி சுமார் 1 கிமீ தூரத்தில் அவரது மாமியார் மயக்கம் வருவதாக சொன்னபோது மேற்படி இரு சக்கர வாகனத்தை நிறுத்துவதற்குள் அவர் மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டதாக அவரை மேல்மருவத்தூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்ததாகவும் கூறினார். நான் மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். மறுநாள் மதுராந்தகம் அரசுமருத்துவமனையில் போலிசார் நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் விபத்து யாருடைய கவனக்குறைவினால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். போலிசார் எனது ஊர் மற்றும் விலாசத்தை மட்டும் கேட்டார்களா என்றால் இல்லை. இறந்தவரின் அடையாளம் குறித்தும் என்னிடம் விசாரணை செய்தார்கள். போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் கையொப்பம் செய்து சாட்சி அளிக்கிறேன் என்றால் சரிதான். அதன் பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்தானது இறந்தவரின் கவனக்குறைவினால் ஏற்பட்டது என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 392/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | செல்வம் |
| Father / Husband Name | ஆதிகேசவன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **24.03.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னையில் வசித்து பிளாஸ்டிக் கம்பெனி வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மருமகன் ஆவார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என் மனைவி தங்கம்மாள் என்பவர் கடந்த 31.07.2016 ம் தேதி சாலவேட்டில் உள்ள எனது மகள் பொற்கொடியின் வீட்டிற்கு திருவிழாவிற்கு சென்றுவிட்டு ஆஜர் எதிரி எனது மருமகனின் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து கொண்டு ஊருக்கு திரும்புவதற்காக மேல்மருவத்தூர் பேருந்து நிலையத்திற்கு வரும்போது ராமாபுரம் தாண்டி பாண்டியம்மன் கோவில் அருகே என் மனைவி மயக்கம் வருவதாக கூறியபோது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை நிறுத்துவதற்குள் என் மனைவிக்கு சர்க்கரை நோய் இருப்பதால் மயக்கம் ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டதாக தகவல் தெரிந்து நான் மேல் மருவத்தூர் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் மனைவி இறந்திருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. வழக்கில் இறந்த தங்கம்மாள் எனது மனைவி ஆவார். விபத்து குறித்து நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவினால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் விபத்து நடந்த மறுநாள் கொடுத்தேன். புகாரை நான் எழுதினேனா என்றால் இல்லை. யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் மட்டும் செய்தேன். விபத்து என்னுடைய மனைவியின் கவனக்குறைவினால் தான் ஏற்பட்டது என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**